# விஜயபாரதம்

29.08.2020 மலர் - 1, இதழ் - 146 VIJAYABHARATHAM DAILY

மின்னனு தின இதழ் (தனிச்சுற்று)


# வணக்கம்

## ஐயப்பன் ஆபரண அடமானம் கேலிக்கூத்து...



கேரளா மாநில திருவாங்கூர் தேவசம் போர்டின் நிர்வாகத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்த மாதத்திற்கான சம்பளம் வழங்க கஜானவில் பணம் இல்லை. அதனால் சுவாமி ஐயப்பனின் ஆபரணங்களை வங்கியில் அடமானம் வைத்து சம்பளம் கொடுக்க முடிவு எடுத்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்தர்கள் அளித்த காணிக்கையை அரசின் கஜானவிற்கு மடைமாற்றம் செய்த இந்த அரசு கோயிலில் பணம் இல்லை என்றால் எடுத்ததை திரும்ப கொடுப்பது தானே நியாயம். காணிக்கை பணம் உண்டியலில் கொட்டும்போது அதனை அரசின் செலவுக்கு பயன்படுத்தியதை போன்று தற்போது கொரானா முடக்கத்தின் காரணமாக வருமானமின்றி தவிக்கும் திருவாங்கூர் போர்டுக்கு எடுத்த பணத்தை திருப்பி கொடுத்து உதவ வேண்டும். அதற்கு பதிலாக ஐயப்பனின் விலை மதிக்க முடியாத ஆபரணங்களை வங்கியில் அடமானம் வைப்பது ஆளும் இடதுசாரி அரசின் கயமைதனத்தை வெளிப்படுத்துகிறது.

ஆலயங்களையும் இறைநம்பிக்கையையும் துச்சம் என நினைத்து ஆலய சொத்துக்களை சூரையாடும் இந்த கும்பல்கள் ஏற்கனவே திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி ஆலயத்தின் புதையலை கொள்ளையடிக்க முயன்றது நீதிமன்றத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சுவாமி ஐய்யபன் ஆபரணங்களை அடமானம் என்ற பெயரில் வங்கிக்கு அனுப்பி போலிகளை வைத்து ஏமாற்றிவிட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் அரசின் இந்த செயல் கேலிக்கூத்தானது. வன்மையாக கண்டிக்கதக்கது.

## ஆக்கிரமிப்பு பாதையை மீட்ட ஹிந்து அமைப்பு

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒடைப்பட்டி பழங்குடி ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுப்பாதையை சுமார் 33 ஆண்டுகளாக மாற்று சமுதாயத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இதனை அறிந்த ஹிந்து அமைப்புகள் ஒன்றிணைந்து களத்தில் நின்று போராடி அந்த பகுதியின் 1கிலோ மீட்டர் தூரத்திற்கு 32அடி அகலம் உள்ள அந்த பாதையை மீட்டுக் கொடுத்துள்ளனர்.

## அது சரி என்றால், இதுவும் சரிதான் !

கேரளாவில் கிருஷ்ண ஜெயந்தியின் போது தனது குழந்தைக்கு கிருஷ்ணர் வேடமிட்ட'பேகம் ஷா' என்ற இஸ்லாமிய சகோதரியை...ஆபாசமாக விமர்சித்த உள்ளூர் ஜமாத்திற்கு கண்ணியமாக பதிலளித்தார் அந்த சகோதரி. கிருஷ்ணர் வேடமிட்டது, தவறு என்றால் அன்று சபரிமலை பெண்கள் நுழைவு போராட்டத்திற்கு இஸ்லாமிய பெண்களை திரட்டி சம்மந்தமின்றி ஆதரவு தந்து இஸ்லாமிய பெண்கள் மனித சங்கிலி நடத்தியதும்



தவறு தானே?சபரிமலைக்கும் பர்தா போட்ட இஸ்லாமிய பெண்களுக்கும் என்ன சம்மந்தம்? கிருஷ்ணர் வேடமிட்டது என் குழந்தையின் விருப்பம். அதை நானே தடுக்காத போது கேள்வி கேட்க நீங்கள் யார் என்றார்? வாழ்த்துக்கள் சகோதரி.!!

## சிந்தனை செய் மனமே!



மகான்கள் போல வாழ வேண்டும்
என்று அவசியமில்லை
மனசாட்சி படி வாழ்ந்தாலே
போதும் !

# தர்காவுக்குள் சிவலிங்கம்



மகாராஷ்ட்ரா மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள ஜலாலுதின் தர்காவுக்குள் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதை அகற்ற பல முறை முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை .

ஒன்று சிவலிங்கத்தை அகற்ற வரும் JCB எந்திரங்கள் பழுதாகி சேதமடையும், இல்லையென்றால் சிவலிங்கத்தை அகற்ற முயற்சி மேற்கொள்ளும் காண்ட்ராக்டருக்கு ஏதாவது ஒரு விதத்தில் மரணம் சம்பவிப்பது வழக்கமாகி வருகிறது. இதனால் அந்த சிவலிங்கத்தை இன்று வரை சைத்தான் ஏன்று கருதி அகற்றும் முயற்சியை தர்கா நிர்வாகத்தினார் கைவிட்டுவிட்டனர் .

எந்த தர்காவில் தலவிருட்சம் காணப்படுகிறது ? அந்த தர்காவே ஒரு சிவபெருமானின் கோயில் என்பது சொல்லாமலே தெரிகிறது .எத்தனை அடி ஆழத்திலிருந்த மிகப்பெரிய பாறையின் மீது சிவலிங்கத்தை செதுக்கி வழிபட்டார்களோ நம்முன்னோர்கள். இந்த சிவலிங்கம் நம்முடைய சனாதனத்தை தாங்கி நிற்கிறது.

# தயாராகி விட்டது அடல் சுரங்கப்பாதை

இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள மணாலியையும், லடாக் ஒன்றியப் பகுதியின் லே நகரத்தையும் இணைக்கும் நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 490 கிமீ (300 மைல்கள்) ஆகும். கடல் மட்டத்தில் 8.8 கிமீ நீளமும் 3000 மீட்டரும் கொண்ட இந்த சாலையில் மலையை குடைந்து புதிய ரோதங் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது..

அதன் கட்டுமான பணி நிறைவு பெற்றது... இனி இந்த சுரங்கத்திற்கு அடல் சுரங்கம் என்று பெயர். இந்த சுரங்கப்பாதை லேஹ் மற்றும் மணாலிக்கு இடையிலான தூரத்தை வெறும் 46 கிமீ ஆக குறைக்கும். இதனை மத்திய ராணுவத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.



# சேவையில் வாழ்பவர்

மும்பையின் பிரபல டாடா புற்றுநோய் மருத்துவமனை முன்பு ஏராளமான நோயாளிகள் முகத்தில் மரண வலியுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்களது உறவினர்களோ தீராத சோகத்துடன் தங்க இடமின்றி சாப்பிட உணவின்றி தவித்துக் கொண்டிருந்தன. இதை அந்த வழியே சென்ற இளைஞன் ஒருவன் பார்த்தான் இந்த சம்பவம் தொடர்ந்து அவனை தூங்க விடாமல் செய்தது. இதனால் ஒரு முடிவு செய்து தனது சேமிப்பிலிருந்து ஒரு தொகையை எடுத்துக் கொண்டு ஒரு கடையை வாடகைக்கு எடுத்து புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் உணவு மற்றும் தங்க ஏற்பாடும் செய்து கொடுத்தான்.

சுமார் 50பேருடன் துவங்கிய இந்த சேவை பணியானது பின்னர் ஆலமரமாக விரிந்தது. இதனை தொடர்ந்து பல்வேறு நன்கொடையாளர்களின் உதவியுடன் மிகப்பெரிய சேவை அமைப்பாக உருவானது. காற்று , மழை , வெயில் என்று எந்த சூழ்நிலையிலும் தடையின்றி சேவை தொடர்ந்தது. இதன் வெற்றியை தொடர்ந்து நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளையும் வழங்க ஆரம்பித்தார். இதற்கு என ஒரு மருந்து வங்கி துவக்கப்பட்டது. இந்த வங்கியில் மூன்று மருத்துவர்கள் மூன்று செவிலியர்கள் தன்னார்வ சேவை வழங்கினர். அது மட்டுமில்லமல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறு குழந்தைகளுக்கு பொம்மைகள் வழங்க அதற்கென ஜீவன் ஜோட் என்ற பொம்மை வங்கி துவக்கப்பட்டுள்ளது.

ஜீவன் ஜோதி கேன்சர் ரிலிஃப் & சர்வீஸ் அமைப்பு துவங்கப்பட்டு 30 ஆண்டுகளை நிறைவு செய்துவிட்ட நிலையிலும் தொண்டு தொடர்கிறது இதனை ஆரம்பித்த ஹர்க் சந்த் சாவ்லா என்ற நபரின் மனிதாபிமானத்திற்கு நாம் தலைவணங்கியாக வேண்டும்.

